15.04.2025 **MCOP.No.** 69 / 2021

**ம.சா. 2 பெயர்: முருகன் த/ பெ :சின்னசாமி**

**சாட்சி ஆஜர். பிரமாண செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் இல்லை. 1ம் மனுதாரர் லட்சுமி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன் . நான் எந்த ஊர் என்றால் அங்கம்பட்டி விபத்தில் இறந்த வசந்தா எந்த ஊர் என்றால் மேற்களாம்பட்டி கிராமம் . நான் விபத்து சமயத்தில்அங்கம்பட்டி பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். வசந்தா பேருந்திற்குள் இருந்தார் என்றால் சரிதான். பேருந்திற்குள் நடந்த விசயம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர் பேருந்தில் இருந்து கீழே இறங்கியபோதுதான் விபத்து ஏற்பட்டது. பேருந்திலிருந்து பயணிகளை இறங்க கூடாது என்று நடத்துனர் அறிவுறுத்தியும் அதை கேட்காமல் வசந்தா பேருந்தில் இருந்து இறங்கி உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வசந்தாவுடன் 6 , 7 நபர்கள் பேருந்தில் இருந்து இறங்கினார்கள். வசந்தா அம்மாள் அஜாக்கிரதையாக பேருந்தில் இருந்து இறங்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வசந்தா பேருந்தில் இருந்து இறங்கியபோது லக்கேஜ் எதுவும் வைத்திருந்தாரா என்றால் சிறிய பேக் ஒன்று வைத்திருந்தார். வசந்தா பேருந்தில் இருந்து இறங்கியபோது கையில் அதிக லக்கேஜ் வைத்திருந்தார் என்றும் அதை தூக்கமுடியாமல் அவராக தவறி விழுந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. நானும் லட்சுமியும் ஒரே ஊர் காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

ஓம்/– திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,
சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.